# லுட்சேர்ன் துர்க்கை அம்மன் கோவில்

# தமிழர் இந்து கலாச்சார ஒன்றியம்

## 2025 ம்

## ஆண்டின் பரிபாலனசபையின் ஆண்டறிக்கை

**Tamilische Hindu Kultur Gemeinschaft Luzern**

**Bahnhofstrasse 19a,**

**CH - 6037 Root,**

041 450 02 84, www.ammankovil.ch / info@ammankovil.ch

## செயற்பாட்டறிக்கை 2025

அம்பிகை அடியார்களே!

லுட்சேர்ன் அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயம், சுவிஸ் நாட்டில் வாழும் சைவ சமய அடியார்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றுவதையும், சமூக நலன் மற்றும் அறப்பணிகளை முன்னெடுப்பதையும் தனது பிரதான நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

அருள்மிகு துர்க்கை அம்பாளின் திருவருளாலும், அடியார்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பினாலும், ஆலய பரிபாலன சபையின் திட்டமிட்ட நிர்வாக நடவடிக்கைகளாலும், 2025 ஆம் ஆண்டில் ஆலயத்தின் அனைத்து நித்திய பூசைகள், விசேட விரதங்கள், உற்சவங்கள் மற்றும் சமூக சேவைகள் திட்டமிட்ட முறையில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ்வறிக்கை, 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய ஆன்மீக, நிர்வாக, சமூக மற்றும் நிதி சார்ந்த செயற்பாடுகளை அதிகாரபூர்வமாக பதிவுசெய்யும் நோக்கில் சமர்ப்பிக்கப்படுகிறது.

19.01.2025 லுட்சேர்ன் துர்க்கை அம்மன் கோவிலும் லுட்சேர்ன் தமிழ் மன்றமும் இணைந்து பொது நிறுவனங்களின் ஆதரவுடன் நடைபெறும் தமிழர் திருநாள் நிகழ்வை வெகு விமர்சையாக சிறப்பாக கலைநிகழ்வுகளுடன் பொங்கல் பொங்கி கொண்டாடினோம். அதிகளவான மக்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்வில் ஆலய ஆரம்பகார்த்தா என்ற கௌரவத்தை திரு சிவசுப்பிரமணியம் சண்முகதாசன் அவர்களுக்கும், நீண்டகால இறை பணியாளர் என்ற கௌரவத்தை சிவத்திரு சிவஞானம் ரங்கநாதன் அவர்களுக்கும் துர்க்கை அம்மன் ஆலயம் சார்பாக கௌரவித்திருந்தோம். தமிழர் பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கும் வகையிலும் எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் நோக்குடன் பாரம்பரிய கலை பண்பாட்டு நிகழ்வுகளை கலை ஆர்வம் கொண்ட மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

லுட்சேர்ன் துர்க்கை அம்மன் ஆலயத்தின் ஆன்மீக வளர்ச்சியையும் சமூகநலத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் எமது அடுத்த தலைமுறை இளைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களூடாக ஆலய பணிகளிலும், ஆன்மீக சேவைகளிலும், சமூகத்திற்கான தொண்டுகளிலும் ஈடுபட லுட்சேர்ன் துர்க்கை இளைஞர் தொண்டர் சபை உருவாக்கப்பட்டது. ஆலயத் திருவிழா காலங்களில் அவர்களின் பங்களிப்பு உதவி பேருதவியாக இருந்தது. அத்துடன் 2026 ஆம் ஆண்டு தமிழர் திருநாள் நிகழ்வை எங்களுடன் இணைந்து மிகவும் சிறப்பாக செய்வதற்கு உதவி புரிந்தார்கள்.

கும்பாபிசேக தினம் (மணவாளக்கோலம்) துர்க்கை அம்மனுக்கு 1008 சங்குகளினாலும், விநாயகர், சிவன், முருகன், விஷ்ணு, சண்முகர், நவக்கிரகம், பைரவர் ,பரிவார மூர்த்திகளுக்கு கும்பாபிசேகமும் நடைபெற்று, அடியவர்களால் பொது உபயமாக வெகு சிறப்பாக நடைபெற்றது.

துர்க்காவளாக ஆலயத் திருப்பணி ஏற்பாட்டுக் குழுவுடன் சந்திப்புகள் நடத்தப்பட்டு, துர்க்காவளாக நிதி வருகையை துரிதப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

துர்க்கை அம்மன் ஆலயத்தின் இணையத்தளம் www.ammankovil.ch என்னும் ஒரு இணையதளத்திலேயே அம்மன் கோவில், துர்க்கை அறக்கட்டளை, துர்க்காவளாகம் என மாற்றி அமைக்கப்பட்டது.

"unter einem Dach" “பல மதங்கள் ஒரே கூரையின் கீழ்’ என்ற நிகழ்வில் துர்க்கை அம்மன் கோயிலும் கலந்துகொண்டு சிறப்பித்தது.” இந்த நிகழ்வு ஒரு மத பரிமாணம் கலந்த சமுதாய அமைப்பை ஊக்குவிக்கும் வகையில் நடக்கிறதையும், துர்க்கை அம்மன் ஆலயம் அதன் பங்கு எடுத்தும், ஆதரவையும் வெளிப்படுத்தியது என்பதையும் உணர்த்துகிறது.

23.3.2025 எமது இளம் தலைமுறையினருக்காக இந்து மதத்தை வெளிநாட்டவர்களுக்கு எப்படி விளங்கப்படுத்துவது என்பதற்கான பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. இந்த பயிற்சி பட்டறையை பேர்ன் லிங்கேஸ்வரர் ஆலயத்தின் சிவ கீர்த்தியும் சசி ஐயாவும் இணைந்து நடாத்தி வழங்கினர். அவர்களுக்கும், மற்றும் ஆலயத்தின் சார்பாக இவ்வாய்ப்பை ஏற்பாடு செய்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

மாசி மகம் என்பது மாசி மாதப் பௌர்ணமியுடன் கூடிவரும் மக நட்சத்திர நாளில் சைவ சமய மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு புனித நாளாகும். இந்நாள் கடலாடும் விழா என்றும் அழைக்கப்படுகிறது. அன்றைய தினம் அடியவர்களால் சமுத்திரத்திற்குச் சென்று சமுத்திர நீர் எடுத்துவரப்பட்டு அந்த நீரை கும்பபூசையுடன் அம்மனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டு, சிறப்பான பூஜை வழிபாடுகள் நடத்தப்பட்டு, பின்னர் அம்மன் வீதிவுலாவாக எழுந்தருளி அருள்பாலித்த காட்சி மிகவும் சிறப்பாக இருந்தது.

துர்க்கை அம்மன் ஆலயத்தின் மென்பொருள் அமைப்பில், பழைய முறையில் பல்வேறு விடயங்கள் தனித்தனியாக இருந்தவற்றை (கணக்குப் பதிவு, கடிதங்கள், பூசை விவரங்கள், நன்கொடைகள் போன்றவை) ஒரே பதிவில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், ஆலய வரவு-செலவு விவரங்கள் மூன்று பிரிவுகள் (அம்மன் கோவில் வரவு-செலவு, துர்க்கை அறக்கட்டளை வரவு-செலவு, துர்க்காவளாக வரவு-செலவு) ஒரே பதிவின் கீழ் பார்க்க முடியும். அதாவது, முன்பு தனித்தனியாக இருந்த வரவு செலவுகள், நன்கொடைகள், பூசை விவரங்கள் போன்றவை, இப்போது ஒரே மென்பொருள் (மாடுல்) மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

துர்க்கை அம்மன் ஆலயத்தின் பெயர் பொறிக்கப்பட்ட, புதிதாக வடிவமைக்கப்பட்ட சால்வைகள் சித்திரை தமிழ் வருடப் பிறப்பன்று, வருடம் பிறக்கும் நேரத்தில், மதிய மற்றும் மாலை பூஜைகளின் போது தொண்டர்களுக்கு வழங்கப்பட்டன. இதன் மூலம் தொண்டர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டது.

துர்க்கை சுவையூற்று உணவு சேவையால் தூய்மையான சைவ உணவு, சிற்றுண்டி வகைகள் ஆலயத்தில் செய்து கொடுக்கப்படுகின்றது. இத் திட்டத்தின் மூலம் பெறப்படும் அனைத்து நிதியும் ஆலயவளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும். அடியவர்களாகிய நீங்கள் இத் திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி ஆலயவளர்ச்சியில் பங்கெடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுகொள்ளுகின்றோம்.

அலங்காரத்திற்காக பல வண்ணங்களில் அலங்கார மெத்தைகள் தாயகம் கிளிநெச்சியிலிருந்து தைத்து எடுக்கப்பட்டன.

துர்க்கை அம்மன் அடியவர்கள் ஆலயத்திற்கு நன்கொடையாக வழங்கிய சிறு நகைகள்–தாலிப் பொட்டுக்கள், மோதிரங்கள், சிறு சங்கிலிகள், தோடுகள், பெண்டன்கள் மற்றும் தங்கக் காசுக் கட்டிகள் ஆகியவற்றை ஒன்றுசேர்த்து, துர்க்கை அம்மனுக்கு மூன்று அடுக்கு காசு மாலையை 490 கிராம் எடையில் செய்து அலங்கரித்திருந்தோம்.

பிள்ளையார் பெருங்கதை 21 நாட்களும் தொடர்ச்சியாக ஆலயத்தில் பூசைகள் செய்யப்பட்டது. 21வது நாளில் 21 பிரசாதங்கள் தயாரித்து, விநாயகர் உள் வீதி வலம் வந்து வெகு விமர்சையாக வழிபாடு செய்யப்பட்டது.

அலங்காரத் திருவிழா கணபதி ஹோமத்தின் போது, நிர்வாக சபையினரும் துர்க்கை அம்மன் தொண்டர்களும் இணைந்து தலைப்பாகட்டி கௌரவிக்கப்பட்டனர். திருவிழா ஏற்பாட்டு குழு ஆலோசனையில், திருவிழாவுடன் தொடர்புடைய வேலை திட்டங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அனைத்து தொண்டர்களும் தங்கள் ஆலயத்தின் சிறப்பை கருத்தில் கொண்டு, தங்களின் பங்களிப்புகளைத் திட்டமிட்டு செயல்பட்டனர். திருவிழா சிறப்பாக நடைபெற பணிகள் ஒழுங்காகப் பகிரப்பட்டு, அனைவரும் தங்கள் பங்களிப்பில் முழுமையாக ஈடுபட்டனர். அலங்காரத் திருவிழா உற்சவ குருவாக வைத்தீஸ்வரக் குருக்களும், அகத்தீஸ்வரக் குருக்களும், கையிலை சிவஸ்ரீ இ.சிவசண்முகநாதக் குருக்கள் மற்றும் சுவிஸ் ஐரோப்பா வாழ் அந்தணப்பெருந்தகையோர் கலந்து சிறப்பித்தார்கள். திருவிழாவின் போது எமது ஆலய ஓதுவாரினால் தாய்த்தமிழில் கம்பீரமாக பராக் சொல்லப்பட்டு துர்க்கை அம்மன் வாகனத்தில் வீதி உலாவந்தது சிறப்பான விடயமாகவிருந்தது.

துர்க்கை அம்மன் ஆலய அலங்கார உற்சவத் தேர்த்திருவிழாவின் போது, தாயகத்திலிருந்து பனை ஓலையால் பின்னிய அர்ச்சனை கூடை தருவிக்கப்பட்டு, காலாஞ்சி அர்ச்சனை இல்லாமல் முழுமையான அர்ச்சனை தட்டாக வழங்கப்பட்டதை இட்டு அனைவராலும் பாராட்டப்பட்டது. துர்க்கை அம்மன் திருவிழாவின் போது ஒவ்வொரு வடிவங்களில் செய்யப்பட்ட திருவாசியுடன் வாகனத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சிதந்தது மிகவும் சிறப்பாக இருந்தது. துர்க்கை அம்மன், பிள்ளையார், முருகன் சகிதம் வசந்த மண்டபத்தில் எழுந்தருளிய காட்சியும் கண்கொள்ளாக்காட்சியாகவும் இருந்தது,

தீர்த்தத் திருவிழா நடைபெற்ற பொழுது, பிள்ளையார், அம்மன் மற்றும் முருகப்பெருமான் தங்கள் வாகனங்களில் மூவர்ணங்களால் அழகாக அலங்கரிக்கப்பட்ட வெளிவீதியில் தீர்த்தமாடிய காட்சியும், வாகனங்கள் மூலம் ஊர்வலம் செய்த காட்சியும் மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. இந்த விழாவின் சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து அடியவர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுகளையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

றூத் Gemeinde, மற்றும் துர்க்கை அம்மன் ஆலய சுற்றாடலுக்கு உட்பட்ட நிறுவனங்களுக்கு (Ehliger Bäckerei, Doctor Noèlle Annen) அவர்களின் வாகன தரிப்பிடங்களை பாவித்தமைக்காக ஆலய பிரசாதமாக பழவகைகள் வழங்கி எமது நன்றியை தெரிவித்திருந்தோம்.

சுவிஸில் உள்ள ஆலயங்களான சுக் பிள்ளையார் கோவில், சூரிச் சிவன் கோவில், கூர் பிள்ளையார் கோவில்களின் உற்சவ காலத்தின் போது அவ்வாலயங்களுக்கு துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து சீர்வரிசைகள் எடுத்துச்செல்லப்பட்டு கௌரவித்திருந்தோம்.

திருவெம்பாவை பூசை அதிகாலை 4:45 மணிக்கு திருப்பள்ளி எழுச்சி உடன் ஆரம்பமாகி 10 நாட்களும் உபயமாக அடியவர்களால் செய்யப்பட்டது. அத்துடன் வருகைதந்த அடியவர்களுக்கு காளாஞ்சி பிரசாதங்கள் வழங்கப்பட்ட நிகழ்வனது எமது தாய்த்திருநாட்டில் நடைபெற்றது போல் சிறப்பாக இருந்தது. இவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அடியவர்களுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ் வருடமும் வழமை போல மாநிலத்தில் நடக்கும் எழுச்சி நிகழ்வுக்கும், தேசிய மாவீரர் நாள் நிகழ்வுக்கும் எமது சரீர உதவிகளையும், ஒழுங்குகளையும் செய்து கொடுத்திருந்தோம்.

துர்க்கை அம்மன் ஆலயமானது சுவிஸ் நாட்டிலும், தாயகத்திலும் மக்களுக்கான சேவையை ஆற்றிவருவது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். லுட்சேர்ன் அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயத்தின் நோக்கங்களின் ஒன்றான தாயகத்தில் போரினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் வலுவிழந்த மக்களுக்கு உதவிகள் செய்து வருவது யாவரும் அறிந்ததே. "**இயன்றவரை செய்வோம் இருக்கும் வரை**" என்ற தொனிப்பொருளுக்கு அமைய, எமது நேரடி செயற்பாட்டில் வாழ்வாதாரம், கல்வி, மருத்துவம் போன்ற உதவிகளுக்கு, மக்களால் வழங்கிய அன்பளிப்பான **31.479.45** சுவிஸ் பிராங்குகள் **84** லட்சம் இலங்கை ரூபா பெறுமதியான செயற்திட்டங்களை தாயகமக்களுக்காக செயல்படுத்தியிருந்தோம். தாயகத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அடியவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட **4413.00** சுவிஸ் பிராங்குகளை தாயக பிரதேசங்களுக்கு உதவி திட்டங்களை செய்திருந்தோம். வருடாந்த அலங்கார திருவிழாவின்போது துர்க்கை அறக்கட்டளையால் சிற்றுண்டிச் சாலையில் றோல், அப்பம், பழவகைகள் விற்கப்பட்டு அதில் வந்த லாபம் துர்க்கை அறக்கட்டளையின் கல்வி தீபத்திற்கு கொடுக்கப்பட்டது. துர்க்கை அறக்கட்டளை ஊடாக தாயகத்திலிருந்து சுட்டிகள் மற்றும் பொட்டலங்கள் கொள்முதல் செய்யப்பட்டது. தாயகத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் ஐக்கிய நாடுகள் சபையில் வந்து நேரடியக சாட்சி சொல்லி கதைப்பதற்காக வாழ்வாதார உதவியாக **1000.00** சுவிஸ் பிராங்குகள் வழங்கப்பட்டது.

சுவிஸ் நாட்டு பாடசாலை மாணவ மாணவிகளும், கத்தோலிக்க பாதிரிமார்களும், பத்திரிகை நிருபர்களும், ஆசிரியர்களும் ஆலயத்திற்கு வருகை தந்து எங்கள் வழிபாட்டு முறைகளையும், இந்துமத விளக்கங்களையும் ஆர்வத்துடன் கேட்டறிந்து திருப்தியுடன் செல்கின்றார்கள். அவர்களுக்கான விளக்கங்களை வழங்கிய இளைய தலைமுறையினர் அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரத்துவம் நடைபெறும் குடும்பங்களுக்கு, ஆலயம் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப இறுதி கிரிகைக்கான ஏற்பாடுகள், ஆலோசனைகள், உதவிகள் மற்றும் உணவுகள் வழங்கப்படுகிறது. இந்த சேவை அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது. இதனை நாம் தொடர்ச்சியாக மேற்கொள்வோம்.

ஆலயத்தில் அடியவர்கள் தாமாகவே முன்வந்து திருத்தொண்டுகள் செய்வதற்கும், தமிழர் திருநாள், அலங்கார உற்சவங்கள் போன்ற நிகழ்வுகளில் குழுக்களாக பொறுப்பேற்று செயல்படுவதற்கும், ஆலய வளர்ச்சியில் பங்களித்து சிறப்புச் சேர்க்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

துர்க்கை அம்மன் ஆலயமானது நித்திய பூசைகளுடனும் மேலும் எமது சமய விசேட விரதங்களையும், பூசைகளையும் இணைத்து கொண்டதன் மூலமாக ஆலயத்தின் அடிப்படைத்தேவைகள் அதிகரித்துச்செல்வதால், தங்களால் ஆலயத்திற்காக வழங்கப்படும் சந்தா தொகையை அதிகரிக்கும் மாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். ஆலயவளர்ச்சிக்கான ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குவதனாலும், ஆலயத்தின் சரியைத்தொண்டில் இணைவதன் மூலமும், அத்துடன் ஆலயபரிபாலன சபையினராகிய நாங்களும், அதிகரித்து செல்லும் இச்செலவீனங்களை குறைக்கும் முறைகளை ஆராய்ந்து அவைகளை சிறப்பான செயல் திட்டங்களால் செயல்படுத்துவதன் மூலம் ஆலய வளர்ச்சிக்கு தங்களுடன் இணைந்து செயற்பட தயாராக உள்ளோம்.

ஆலயத்தில் நடைபெறும் நித்திய பூஜைகள், அலங்கார உற்சவங்கள் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைத்து அடியார்களுக்கும், துர்க்காவளாக கட்டிடத்திற்கான நிதி சேகரிப்புப் பணிகளில் சிறப்பாக பங்களித்த அடியார்களுக்கும், திருப்பணி குழு உறுப்பினர்களுக்கும், துர்க்கை இளைஞர் தொண்டர் சபை மற்றும் ஆலய தொண்டர் சபை உறுப்பினர்களுக்கும், துர்க்கை அறக்கட்டளைக்கு உதவிபுரிந்தவர்களுக்கும், குருமார்களுக்கும், பிரசாதங்கள் தயாரித்த அனைவருக்கும் எமது இதயப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அலங்கார உற்சவத்தின் போது தண்ணீர் பந்தல் ஏற்பாடு செய்த ஈழம் மார்க்கெட் நந்தன் அவர்களுக்கும், தண்ணீர் பந்தல் மற்றும் பாதணிகள் வைப்பதற்கான இடங்களை வழங்கிய திரு காண்டீ பாட்டி சர்வீஸ் மற்றும் சிவா அவர்களுக்கும் எமது சிறப்பு நன்றிகள்.
மேலும், எமது கணக்குகளை சீராகக் கணக்காய்வு செய்த கணக்காய்வாளர்களுக்கும், லூட்சேர்ன் தமிழ்மன்ற நிர்வாகத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அனைவரின் தன்னலமற்ற சேவைக்கும், ஒத்துழைப்பிற்கும் துர்க்கை அம்பாளின் பரிபூரண திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.
துர்க்கை அம்மன் ஆலயம் மென்மேலும் வளர்ச்சி பெற்று, சிறப்புடன் விளங்க தங்களின் அக்கறையும், ஆதரவும் தொடர்ந்து கிடைக்க வாழ்த்துகின்றோம்.

**இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க!**

**25.01.2026**

| C. KALAIYALAGAN | க.உருத்திரன் | N. Sri Pathmanathan |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| சந்திரபாலன் கலையழகன் | கணபதிப்பிள்ளை உருத்திரன் | நடராஜா சிறிபத்மநாதன் |



| துர்க்கை அம்மன் ஆலய நகைகள் இருப்பு விபரம் 2025 | | |
|---|---|---|
| இல | விபரம் | கிராம் |
| 1 | அம்மன் சங்கு கை | 78.75 |
| 2 | அம்மன் சக்கர கை | 83.25 |
| 3 | தங்க முடி | 235.80 |
| 4 | பெரிய தங்க வேல் கம்பி | 286.10 |
| 5 | சூலாயுதம் | 74.55 |
| 6 | சிறிய தங்கவேல் | 84.00 |
| 7 | காசுமாலை | 184.00 |
| 8 | பதக்க அட்டியல் கற்களுடன் | 83.20 |
| 9 | அம்மன் கைகள் 2 | 80.15 |
| 10 | பதக்கங்கள் | 35.10 |
| 11 | தாலிப்பொட்டுகள் 11 | 11.59 |
| 12 | பதக்கம் சங்கிலிகள் | 106.10 |
| 13 | சேவற்கொடி | 109.15 |
| 14 | சங்கிலி | 8.00 |
| 15 | அம்மன் ஆரம் | 74.45 |
| 16 | அம்மன் ஆரம் 2024 | 66.00 |
| 17 | மூலஸ்தான அம்மன் தாலி + சங்கிலி | 76.05 |
| 18 | சிலைகளில் உள்ள தாலிப்பொட்டுகள் 8 நிறை எடுக்கவில்லை | 0.00 |
| 19 | 3 அடுக்கு காசுமாலை<br>2024 வரை இருந்த பழைய கல்லு நகை உட்பட 566 கிராம் நகைகள் எடுக்கப்பட்டு இந்த நகை செய்யப்பட்டது.<br>566 - 490.81 = 75.19 கழிவு | 490.81 |
| | 10.12.2025 தொகை (கிராம்) | 2167.05 |



# துர்க்கை அறக்கட்டளை இலங்கை வரவு செலவு 2025

வரவு

| இல | வகை | தொகை |
|---|---|---|
| 1 | Deposit (வைப்பு) | 9,421,400.00 |
| | **வரவு** | **9,421,400.00** |
| 1 | கடனாகப் பெறப்பட்டது(+) | 0.00 |
| 2 | கடன் மீளப் பெறப்பட்டது(RePay)(+) | 0.00 |
| | **கடன்** | **0.00** |
| | **வரவு மொத்தம்** | **9,421,400.00** |
| **ஆரம்ப இருப்பு** | | |
| 1 | ரூபா அறக்கட்டளை 01/01/2025 | 339,510.00 |
| | **ஆரம்ப இருப்பு மொத்தம்** | **339,510.00** |
| | | **9,760,910.00** |


செலவு

| இல | வகை | தொகை |
|---|---|---|
| 1 | மட்டக்களப்பு | 1,699,690.00 |
| 2 | மன்னார் | 625,913.00 |
| 3 | சுட்டி கொள்வனவு | 495,390.00 |
| 4 | யாழ்ப்பாணம் | 1,418,000.00 |
| 5 | திருகோணமலை | 432,565.00 |
| 6 | அம்பாறை | 495,875.00 |
| 7 | கிளிநொச்சி | 308,000.00 |
| 8 | முல்லைத்தீவு வவுனியா | 2,796,750.00 |
| 9 | மேலங்கி இணைப்பாளர் | 80,880.00 |
| 10 | நுவரெலியா | 86,600.00 |
| | **செலவு** | **8,439,663.00** |
| 1 | கடனாக வழங்கியது(-) | 0.00 |
| 2 | கடன் மீளளிப்பு(RePay)(-) | 0.00 |
| | கடன் | **0.00** |
| | **செலவு மொத்தம்** | **8,439,663.00** |

| | |
|---|---|
| A - ஆரம்ப இருப்பு | **339,510.00** |
| B - மொத்த வரவு | **9,421,400.00** |
| C - மொத்த செலவு | **8,439,663.00** |
| **A + B - C இறுதி இருப்பு** | **1,321,247.00** |

**கணக்கு இறுதி இருப்பு**

| இல | கட்டண முறை | வைத்திருப்பவரின் பெயர் | IBAN எண் | மீதம் உள்ள தொகை |
|---|---|---|---|---|
| 1 | ரூபா அறக்கட்டளை 31/12/2025 | Sri Lanka Arakkaddalai | CH1000000000000000005 | 1,321,247.00 |
| | | | **மொத்த இருப்பு** | **1,321,247.00** |



# துர்க்கை அறக்கட்டளை வரவு செலவு விபரம் 2025

| வரவு | | | செலவு | | |
|---|---|---|---|---|---|
| இல | வகை | தொகை (SFr) | இல | வகை | தொகை (SFr) |
| 1 | இதரவரவு | 234.27 | 1 | இலங்கை அனுப்பியது | 26’064.90 |
| 2 | கல்வித்தீபம் | 4’681.00 | 2 | அலுவலகம் | 318.45 |
| 3 | அன்பளிப்பு | 870.00 | 3 | சுட்டி கொள்வனவு | 2’238.00 |
| 4 | உணவு அன்பளிப்பு | 835.00 | 4 | திருவிழா சிற்றுண்டி | 2’858.10 |
| 5 | சந்தா | 825.00 | | | |
| 6 | வாழ்வாதாரம் | 4’421.05 | | | |
| 7 | சுட்டி வரவு | 3’738.00 | | | |
| 8 | திருவிழா சிற்றுண்டி | 6’269.12 | | | |
| 9 | மருத்துவம் | 2’610.00 | | | |
| 10 | வெள்ள நிவாரன நிதி | 4’413.00 | | | |
| 11 | மாவீரர் குடும்பம் | 330.00 | | | |
| | **வரவு மொத்தம்** | **29’226.44** | | **செலவு மொத்தம்** | **31’479.45** |

## 01/01/2025 ஆரம்ப இருப்பு

| | | |
|---|---|---|
| 1 | **கையிருப்பு 01/01/2025** | **3435.45** |
| 2 | **LUKB வங்கி 01/01/2025** | **384.87** |
| | **ஆரம்ப இருப்பு மொத்தம்** | **3’820.32** |

## 31/12/2025 கணக்கு இறுதி இருப்பு

| இல | கட்டண முறை | பெயர் | IBAN எண் | மீதம் உள்ள தொகை |
|---|---|---|---|---|
| **1** | கையிருப்பு 31/12/2025 | Kasse Arakkaddalai | CH1000000000000000004 | **1’391.10** |
| **2** | LUKB வங்கி 31/12/2025 | Bank Arakkaddalai | CH3700778193437632003 | **176.21** |
| | | | மொத்த இருப்பு **31/12/2025** | **1’567.31** |



| 2025 வரவு செலவு | | | | | |
|---|---|---|---|---|---|
| வரவு | | | செலவு | | |
| இல | வகை | தொகை(SFr) | இல | வகை | தொகை(SFr) |
| 1 | சந்தா வரவு | 46'678.00 | 1 | வாடகை / Miete + Nebenkosten | 44'456.50 |
| 2 | அர்ச்சனை | 36'337.00 | 2 | பூசை+உணவு பொருட்கள் | 52'048.68 |
| 3 | உபயம் பூசை | 60'318.00 | 3 | பூசை செலவு | 26'000.00 |
| 4 | திருவிழா அர்ச்சனை | 10'260.00 | 4 | உதவிக்குருக்கள் | 1'392.00 |
| 5 | திருவிழா உபயம் | 28'500.00 | 5 | திருவிழா | 26'090.20 |
| 6 | அமாவாசை + பௌர்ணமி | 4'155.00 | 6 | சமையல் + உதவியாளர் | 22'380.00 |
| 7 | வரலக்ஸ்மி + கௌரிநோன்பு | 4'915.00 | 7 | பொருட்கள் கொள்வனவு | 9'038.35 |
| 8 | சனிஸ்வர விரதம் | 4'773.00 | 8 | திருமணம் | 8'131.80 |
| 9 | பூசை பொருட்கள் | 21'638.75 | 9 | Post+Büro+Internet+Druck | 2'770.38 |
| 10 | சங்காபிசேகம் | 5'356.00 | 10 | சங்காபிசேகம் | 4'251.75 |
| 11 | கந்தசஷ்டி அர்ச்சனை | 3'900.00 | 11 | எரிவாயு / Gas | 1'508.20 |
| 12 | திருமணம் | 18'250.00 | 12 | தொலைபேசி | 1'022.70 |
| 13 | உணவுகள் விநியோகம் | 51'495.00 | 13 | மின்சாரம் | 4'527.50 |
| 14 | நித்திய அர்ச்சனை | 4'806.00 | 14 | கழிவு அகற்றல் / Abfall | 1'267.45 |
| 15 | நிதி அன்பளிப்பு | 2'736.00 | 15 | வாழ்வாதார நிதி | 1'000.00 |
| 16 | உண்டியல் | 4'410.20 | 16 | Versicherung | 3'738.95 |
| 17 | கிரகபிரவேசம் | 2'254.00 | 17 | துர்க்கை அறக்கட்டளை சுட்டி கொள்வனவு | 3'738.00 |
| 18 | பொருள் காணிக்கை | 5'451.00 | 18 | கலண்டர் | 1'706.00 |
| 19 | திருக்கல்யாண + ஆடிப்பூர வரவு | 2'353.75 | 19 | தவில், நாதஸ்வரம் | 3'750.00 |
| 20 | தமிழர் திருநாள் | 1'124.00 | 20 | வங்கி செலவுகள் | '511.99 |
| 21 | Führung, Veranstaltung | 1'950.00 | 21 | தமிழர் திருநாள் | 2'928.55 |
| | **மொத்த வரவு** | **321'660.70** | | **மொத்தசெலவு** | **222'259.00** |
| 2025 வரவு வைத்து வரவேண்டிய பணம் | | 1'900.00 | | 2025 தேறிய இருப்பு (CHF) | **99'401.70** |
| **2025 சேமிப்பு வங்கியில் இடப்பட்டது Luzerner Kantonalbank AG CH9100778193437632001** | | | | | **100'000.00** |

| 01/01/2025 ஆரம்ப இருப்பு | | | |
|---|---|---|---|
| இல | கட்டண முறை | IBAN | தொகை |
| 1 | Bar/Cash | CH1000000000000000001 | **385.08** |
| 2 | Kasse | CH1000000000000000002 | **1'100.00** |
| 3 | Mitglieder Post | CH1009000000123876047 | **5'093.96** |
| 4 | Einkaufen Post | CH3009000000154123100 | **487.92** |
| 5 | Raiffeisen | CH4080808002948579097 | **103'055.35** |
| 6 | LUKB | CH6400778193437632002 | **23'486.73** |
| 7 | LUKB_S | CH9100778193437632001 | **244'008.47** |
| | **1.1.2025 ஆரம்ப இருப்பு மொத்தம்** | | **377'616.51** |

| 31/12/2025 இறுதி இருப்பு | | | | |
|---|---|---|---|---|
| இல | கட்டண முறை | பெயர் | IBAN எண் | மீதம் உள்ள தொகை |
| 1 | Bar/Cash 31/12/2025 | கையிருப்பு | CH1000000000000000001 | **2’560.68** |
| 2 | 2025 வரவு வைத்து வரவேண்டிய பணம் | | | **1’900.00** |
| 3 | Kasse 31/12/2025 | Kasse Kovil | CH1000000000000000002 | **1’100.00** |
| 4 | Mitglieder 31/12/2025 | Hindu Temple | CH1009000000123876047 | **4’615.32** |
| 5 | Einkaufen 31/12/2025 | Hindu Temple | CH3009000000154123100 | **1’662.22** |
| 6 | Raiffeisen 31/12/2025 | Sparkonto | CH4080808002948579097 | **104’350.95** |
| 7 | LUKB 31/12/2025 | Hindu Temple | CH6400778193437632002 | **16’662.90** |
| 8 | LUKB_S 31/12/2025 | Sparkonto LUKB | CH9100778193437632001 | **344’166.13** |
| **31.12.2025 இறுதி இருப்பு மொத்தம்** | | | | **477’018.20** |

# துர்க்காவளாகம் இன்வில் திருப்பணி 2025

| இல | வரவு | தொகை | இல | செலவு | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | துர்க்காவளாகம் இன்வில் | 357'602.10 | 1 | Architec | 20'000.00 |
| | | | 2 | Baugesuch | 10'503.45 |
| | | | 3 | Anwalt | 4'215.95 |
| | | | 4 | வங்கி வரி | '250.50 |
| | | | | | |
| | **வரவு மொத்தம்** | **357'602.10** | | **செலவு மொத்தம்** | **34'969.90** |
| | | | | | |
| | A - ஆரம்ப இருப்பு (SFr) | **274'210.56** | | | |
| | B - மொத்த வரவு (SFr) | **357'602.10** | | | |
| | C - மொத்த செலவு (SFr) | **34'969.90** | | | |
| | A + B - C இறுதி இருப்பு (SFr) | **596'842.76** | | | |
| | | | | | |

**கணக்கு இறுதி இருப்பு**

| இல | **கட்டண முறை** | **பெயர்** | **IBAN எண்** | **மீதம் உள்ள தொகை** |
|---|---|---|---|---|
| 1 | Raiffeisen Inwil 31/12/2025 | Bau Inwil | CH3480808001852842858 | 596'842.76 |